DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Pandiammal | Father/Husband Name: | Sakthivel |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் குண்ணங்குடிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். 1-வது எதிரி என் கணவா். மற்ற ஆஜர் எதிரிகளை தெரியும். 12.08.12ம் தேதி எனக்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. நாங்கள் காதல் திருமணம் செய்துகொண்டோம். எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. திருமணத்திற்கு பிறகு சிறிது நாட்கள் கழித்து எனது பெற்றோர் 10 பவுன் நகை கொடுத்தார்கள். 1-வது எதிரி டெய்லா் தொழில் செய்து வருகிறார். என் கணவா் அவரது தொழிலை விரிவுபடுத்துவதற்காக என்னுடைய 10 பவுன் நகையை வாங்கி கடையை விரிவுபடுத்தினார். பிறகு சிறிது நாட்கள் சந்தோசமாக இருந்தோம். என் மகன் பிறந்து 2 வருடம் கழித்து இரவு நேரங்களில் அடிக்கடி என் கணவருக்கு போன் வருவதைப்பற்றி கேட்டதற்கு என் கணவரும் சாந்தி என்பவரும் ஆபாசமாக எடுத்துக்கொண்ட புகைப்படத்தை காட்டி என்னை மிரட்டினார். இவளோடுதான் நான் சந்தோசமாக வாழ்வேன், உன்னோடு வாழமுடியாது என்று கூறி என்னை அடித்து துன்புறுத்தினார். மேலும் உன்னையும, உன் குழந்தையையும் பெட்ரோல் ஊற்றி கொளுத்தினாலும் உன் சமூகத்தினா் என்னை கேட்கமுடியாது என்றும் கூறி அதிகமாக அடித்து துன்புறுத்தினார். என்னை மண்டையை உடைத்தும், பல்லை உடைத்தும் துன்புறுத்தினார், நான் வீட்டைவிட்டு வெளியே வந்தாலும் தலைமுடியை இழுத்துச்சென்று அடிப்பார். 1-வது எதிரி 20 ரூபாய் பத்திரத்தில் அவருடன் எனக்கும் என் மகனுக்கும் எந்த உறவுமில்லை என்றுகூறி கையெழுத்துப்போடுமாறு கேட்டார். போட மறுத்தால் உன்னை பெட்ரோல் ஊற்றி எறித்துவிடுவேன் என்று மிரட்டினார்.

அதை நான் என் மாமியார் வீரம்மாளிடம் சொன்னபோது அவரும் என்னை நீ என் சாதிய சனமா என்று சொல்லி என்னை அடித்து துன்புறுத்தினார். எதிரிகள் சாந்தி மற்றும் பழனியம்மாளும் ஏன் எங்களை துன்புறுத்துகிறாய் என்று கேட்டு என்னை அடித்தார்கள். மறுநாள் 1-வது எதிரியும் சின்னக்காளை என்பவரும் என்னை பத்திரத்தில் கையெழுத்து போடுமாறு கேட்டு இல்லையென்றால் உன்னை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவேன் என்றும், உன்னையும் பிள்ளையையும் எங்காவது காடுமாத்தி கொண்டுபோய் விட்டுவிடுவேன் என்றும் மிரட்டினார். மேற்படி சம்பவத்தின்போது என் கணவர் என்னை அதிகமாக அடித்து சித்திரவதை செய்ததில் நான் வெளியே செல்ல முயற்சித்தபோது அருகிலிருந்த கல்லில் என் கணவர் வேஷ்டி தடுமாறி விழுந்து அவரது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதனால் அவர் என்னையும் என் குடும்பத்தாரையும் மொத்தம் 6 பேர்மீது கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அதன்பேரில் நாங்கள் நீதிமன்றத்தின்மூலம் ஜாமீன் எடுத்து காவல்நிலையத்தில் கையெழுத்து போடச்சென்றபோது என் கணவரும் சின்ன்காளையும் வந்து வழிமறித்து கையெழுத்து போடுகிறாயா இல்லை உன்னையும் உன் பிள்ளையையும் எறித்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதனால் நான் மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும், போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Andichamy | Father/Husband Name: | Chinnakkalai |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் குண்ணங்குடிப்பட்டியில் வசிக்கிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்று வீட்டிலிருந்து வருகிறேன். அ.சா.1 என் அக்கா மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 15 அல்லது 20 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1க்கும், 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை உள்ளது. 1-வது எதிரி டெய்லராக வேலை பார்த்து வந்தார். அவரது தொழிலை விரிவுபடுத்துவதற்காக அ.சா.1-ன் 10 பவுன் நகையை வாங்கிவிட்டார். பிறகு நாங்கள் சம்பவம்பற்றி கேட்பதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தபோது 1-வது எதிரி நகை நட்டுகளை கேட்கக்கூடாது என்று சொல்லி எங்களை பெட்ரோல் ஊற்றி எறித்துவிடுவதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்களை சொன்ன விசயங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் போலீசாரிடம் சொன்னேன். கொட்டாம்பட்டி போலீசார்தான் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். நான் முதல் விசாணையில்சொன்ன விசயங்கள் பாண்டியம்மாள் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Ramachandran | Father/Husband Name: | Sundar |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 30.04.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் குண்ணங்குடிப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். 1-வது எதிரியை தெரியும், மற்ற எதிரிகளை தெரியாது. அ.சா.1-ம் 1வது எதிரியும் என் பக்கத்து வீட்டில் குடியிருந்தார்கள். 2015 மற்றும் 2016ம் வருடங்களில் எங்கள் வீட்டின் அருகில் குடியிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. கணவன் மனைவியும், அடிக்கடி அடித்துக்கொள்வார்கள். திடீரென அய்யோ அம்மா என்று சத்தம் கேட்கும், நாங்கள் பலமுறை சென்று அவர்களை அடித்துக்கொள்ளாதீர்கள் என்று கூறுவேன். அ.சா.1 அவரது கணவர் 10 பவுன் நகைகளை வாங்கிக்கொண்டு திரும்பித்தரவில்லை என்று கூறி என்னிடம் அழுவார். ஒருமுறை எதிரி அ.சா.1ஐ அடித்து மண்டையை உடைத்துவிட்டு குழந்தையை தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார், மறுநாள் அ.சா.1 அவரது குழந்தையை வாங்கி வந்துவிட்டார். பிறகு அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன்பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் ஹோட்டலில் வேலை செய்வதால் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு இரவில்தான் வீட்டிற்கு வருவேன் என்றால் நான் இரவு சிப்ட்டில்தான் வேலை செய்கிறேன். இவர்களுடைய சண்டை எப்பொழுதும் பகலில் நடந்ததில்லை. எதிரிகளுக்கும் அ.சா.1-க்கும் இடையே நடக்கும் சண்டையை நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் இரண்டுமுறை நேரடி யாக பார்த்திருக்கிறேன். எத்தனை வருடங்களுக்கு முன்பாக அந்த சண்டையை நான் பார்த்திருக்கிறேன் என்றால் 4 வருடங்களுக்கு முன்பாக.

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதில் 10 பவுன் நகையை கொடுத்த விவரம் எனக்கு அ.சா.1 சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். சக்திவேல் மற்றும் பாண்டியம்மாளுக்கிடையே கொடுக்கல் வாங்கலில் சண்டை என்றால் சரிதான். பாண்டியம்மாள் மற்றும் அவரது உறவினர்கள் 1-வது எதிரி சக்திவேலை அடித்து கையை முறித்ததால் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் அவர்கள்மீது வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை சாட்சி சொல்வதற்காக பாண்டியம்மாள்தான் அழைத்து வந்தார் என்றால் பாண்டியம்மாள் வழக்கு இருப்பதை சொல்லி அழைத்தார். நேற்று பாண்டியம்மாள் சொல்லித்தான் என்னை சாட்சியாக சேர்த்த விவரம் தெரியும் என்றால் சரிதான், ஆனால் வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் சம்பவத்தின்போதே விசாரித்தனர். என்னை எந்த போலீசார் விசாரித்தனர் என்றால் கொட்டாம்பட்டி போலீசார். சண்டைபோட்டுக்கொண்ட தேதி சரியாக சொல்லமுடியுமா என்றால் தேதி நினைவில் இல்லை ஆனால் 2015ல் கடையிசிலிருந்து 2016வரை இருக்கும். 1-வது எதிரியின் ஊர் அலங்கம்பட்டி என்றால் சரிதான். பாண்டியம்மாளை முதலில் சிங்கம்புணரியில் கட்டிக்கொடுத்திருந்தார்கள் என்பது தெரியுமா என்றால் கேள்விப்பட்டிருக்கிறேன், நேரடியாக தெரியாது. நானும் 1-வது எதிரி சக்திவேலும் கருங்காலக்குடியில் பக்கத்து பக்கத்து கடையில் வேலை சேய்தோம் என்றால் 25 வருங்களுக்கு முன்பாக வேலை செய்தோம். அப்பொழுது எனக்கும் அவருக்குமிடையே மனஸ்தாபம் எற்பட்டு அதனால் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல. நானும் அ.சா.1 பாண்டியம்மாளின் வீடும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் ஒரே லைன் வீட்ல் முதல் வீட்டில் பணா்டியம்மாளும் 2-வது வீட்டில் நானும் குழயிருக்கிறோம். 1-வது எதிரிக்கு காத்தம்மாள் என்ற மனைவியும், அவா் மூலம் 18 வயதில் ஒரு பெண்குழந்தை உள்ள விவரமும் எனக்கு தெரியுமா என்றால் பாண்டியம்மாள் சொல்லி தெரியும். எனக்கு எந்த விசயமும் தெரியாது, சக்திவேலுக்கு அ.சா.1 பாண்டியம்மாள் 5 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டியுள்ளது அந்த கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை ஏற்பட்டதால் அதனால் பொய்யான புகார் கொடுத்துள்ளார். அந்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் புகார்தாரர் மற்றும் அவரது உறவினர்கள்மீது உள்ள புகாரினை சரிகட்டுவதற்காகவும், அ.சா.1 பாண்டியம்மாள் கொடுத்த பொய் புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | :Karpakam | Father/Husband Name: | Shanmugam |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 17.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அலங்கம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 என் அக்கா. எதிரிகளை தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் 1வது எதிரியும் என் அக்காவும் எங்களுக்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டார்கள். இந்த திருமணத்திற்கு முன்பாக என் அக்காவை சிங்கம்புணரியில் ஒரு நபருக்கு 12 பவுன் நகை கொடுத்து திருமணம் செய்துகொடுத்து அவரது கணவர் இறந்துவிட்டதால் அவர்கள் என் அக்காவிடம் 10 பவுன் நகையை திரும்ப கொடுத்து அதை என் அக்காவின் மறுமணம் செய்துகொடுப்பதற்காக வைத்திருந்தோம். மேற்படி எதிரியை திருமணம் செய்தபொழுது என் அக்கா அந்த 10 பவுன் நகையையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். என் அக்காவிற்கு ஒரு மகன் மட்டும் உள்ளார். என் அக்காவிற்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் என் அக்காவிற்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தபோது என் பெற்றோர் 10 பவுன் நகை கொடுத்ததார்கள் என்றும், என் அக்காவிற்கு 2 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ளது என்றும், திருமணமாகி 2 வருடங்களுக்கு பிறகு 1-வது எதிரி என் அக்காவிடம் சாந்தி என்பவருடன் அவர் ஆபாசமாக எடுத்துக்கொண்ட

புகைப்படத்தை காட்டி மிரட்டி வந்ததாகவும் அதை தட்டிக்கேட்ட என் அக்காவையும், குழந்தையையும் பெட்ரோல் ஊற்றி கொன்றுவிடுவேன் என்று மிரட்டி வந்ததாகவும், என் அக்காவிற்கு செய்த 10 பவுன் நகையை என் அக்காவின் கணவர் சாந்தி என்பவரிடம் கொடுத்து தற்போது சாந்தி வைத்திருப்பதாகவும், மேலும் 1-வது எதிரி என் அக்காவை விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து போடச்சொல்லி அடித்துகொடுமைப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் 1-வது எதிரியும் சின்னக்காளை என்பவரும் என் அக்காவை அடித்து துன்புறுத்தி பல்லை உடைத்து வலிதாங்க முடியாமல் அவரிடமிருந்து என் அக்கா தப்பித்துவர முயற்சித்தபோது 1-வது எதிரி கால் இடறி கீழே விழுந்து கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், ஆனால் அதை என் அக்காவிற்கு எதிராக கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ததில் என் அம்மா, நத்தத்தில் குடியிருக்கும் என் தங்கை, என் தங்கையின் கணவர் ஆகியோர்கள் முன் ஜாமீன் பெற்று கையெழுத்து செய்வதற்காக காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் அணைவரும் அவர்களை வழிமறித்து நாங்கள் கேட்கும் பத்திரத்தில் கையெழுத்து போடு இல்லையென்றால் உன்னை எங்காவது கூட்டிக்கொண்டுபோய் கையெழுத்து வாங்கி உன்னை கழுத்தை நெறித்து கொன்றுவிடவேன் என்று மிரட்டியதாகவும், சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதாலும், என் அக்காவுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்பதாலும் உண்மையை மறைத்து எதிரிக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 189 /2020

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Chinnaiah | Father/Husband Name: | Sangampetiar |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 17.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் அலங்கம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும், எதிரிகளை தெரியும். அ.சா.1க்கும் 1-வது எதிரிக்கும் திருமணமான விவரம் எனக்கு தெரியாது. அவர்களுக்கு ஒரு பையன் இருப்பதாக கேள்விப்பட்டேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் கருங்காலக்குடியில் ஆவின்பால் அருகில் அ.சா.1ம் 1-வது எதிரியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அ.சா.1 எதிரியை வீட்டிற்கு வருமாறு அழைத்ததற்கு அவர் செல்லாமல் அங்கே நின்று பேசிக்கொண்டிருந்ததால் நான் அவர்களை பார்த்து வீட்டிற்கு போய் பெரியவர்களை வைத்து பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த அ.சா.1க்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தபோது அ.சா.1ன் பெற்றோர் 10 பவுன் நகை கொடுத்ததார்கள் என்றும், அ.சா.1க்கு அக்காவிற்கு 2 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ளது என்றும், திருமணமாகி 2 வருடங்களுக்கு பிறகு 1-வது எதிரி அ.சா.1க்கு சாந்தி என்பவருடன் அவர் ஆபாசமாக எடுத்துக்கொண்ட புகைப்படத்தை காட்டி மிரட்டி வந்ததாகவும் அதை தட்டிக்கேட்ட அ.சா.1யும்

குழந்தையையும் பெட்ரோல் ஊற்றி கொன்றுவிடுவேன் என்று மிரட்டி வந்ததாகவும், அ.சா.1க்கு செய்த 10 பவுன் நகையை அ.சா.1ன் கணவர் சாந்தி என்பவரிடம் கொடுத்து தற்போது சாந்தி வைத்திருப்பதாகவும், மேலும் 1-வது எதிரி அ.சா.1ஐ விவாகரத்து பத்திரத்தில் கையெழுத்து போடச்சொல்லி அடித்துகொடுமைப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் 1-வது எதிரியும் சின்னக்காளை என்பவரும் அ.சா.1ஐ அடித்து துன்புறுத்தி பல்லை உடைத்து வலிதாங்க முடியாமல் அவரிடமிருந்து அ.சா.1 தப்பித்துவர முயற்சித்தபோது 1-வது எதிரி கால் இடறி கீழே விழுந்து கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், ஆனால் அதை அ.சா.1க்கு எதிராக கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ததில் அ.சா.1-ன் அம்மா, நத்தத்தில் குடியிருக்கும் அ.சா.1-ன் தங்கை, அவரது தங்கையின் கணவர் ஆகியோர்கள் முன் ஜாமீன் பெற்று கையெழுத்து செய்வதற்காக காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் அணைவரும் அவர்களை வழிமறித்து நாங்கள் கேட்கும் பத்திரத்தில் கையெழுத்து போடு இல்லையென்றால் உன்னை எங்காவது கூட்டிக்கொண்டுபோய் கையெழுத்து வாங்கி உன்னை கழுத்தை நெறித்து கொன்றுவிடவேன் என்று மிரட்டியதாகவும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதாலும், உண்மையை மறைத்து எதிரிக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.